**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : திரு.R.பாண்டி மகாராஜா.,B.Sc.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13–ம் நாள் திங்கள்கிழமை
**இ.ஏ.எண்.8/2025 & இ.ஏ.எண்.9/2025 in இ.ஏ.எண்.6/2024 in இ.பி.எண்.6/2015 in அ.வ.எண்.473/1994**

S.விக்னேஸ்வரன் .... மனுதாரர்/கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்

/எதிராக/

1. வள்ளியாத்தாள் (இறப்பு)
2. தண்டபாணி கவுண்டர்
3. நல்லம்மாள் (எ) நல்லாத்தாள்
4. தனலட்சுமி
5. ஈஸ்வரமூர்த்தி (இறப்பு)
6. தாமரைச்செல்வி
7. நந்தகுமார்
8. நவீன்குமார்
9. வள்ளிநாயகி ....எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

10. கந்தசாமி கவுண்டர்
11. தெய்வாத்தாள் (இறப்பு)
12. சாவித்திரி
13. செல்வராஜ்
த/பெ.செல்லப்பகவுண்டர்
....எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனுக்களானது 07.10.2025 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.T.கார்த்திகேயன் B.Sc.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.C.செல்வராஜ் B.A.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 11 மற்றும் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திருமதி.P.சசிகலா B.A.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 10 மற்றும் 13 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், 1 முதல் 9 மற்றும் 11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டும், மனு, எதிருரை பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.10.13 17:16:27 +0530

**பொதுவான உத்தரவு**

இந்த E.A.No.8/2025 என்ற மனுவானது E.A.No.6/2024–ல் விசாரணையை மீண்டும் திறப்பதற்காக உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த E.A.No.9/2025 என்ற மனுவானது E.A.No.6/2024–ல் மனுதாரர் தரப்பில், மேலும், சாட்சிகள் விசாரணை செய்வதற்காக சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புவதற்காக உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை XVI, விதி 1–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் சுருக்கம் :**

இந்த மனுக்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரிக்கைகளில் சொல்லப்பட்டுள்ளதாவது, இதன் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள E.A.No.6/2024–ல் தாக்கல் செய்யப்பட்ட படி குறிப்பாணை (Batta Memo) இந்நீதிமன்றத்தால் உரிய மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்பதற்காக திருப்பப்பட்டது. மேலும், அந்த E.A.No.6/2024–ல் மனுதாரர் தரப்பின் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டுவிட்டது. மேற்காணும், அந்த விவரமானது விசாரணை தேதியன்று பதிவு செய்யப்பட்ட E–Court diary–யை பார்த்த பிறகு எனக்கு தெரிய வந்தது. எனது வழக்கினை நிரூபிப்பதற்கு இந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளை விசாரணை செய்வது மிகவும் அவசியமாகயுள்ளது. எனவே, மேற்காணும் காரணங்களின் அடிப்படையில், இந்த மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.10.13 17:16:33 +0530

**2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :- (இ.ஏ.எண்.9/2025-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையையே இ.ஏ.எண்.8/2025-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டது) (1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையே 11 மற்றும் 12 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.)**

இந்த மனுக்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள, இந்த மனுதாரர் E.A.No.6/2024 என்ற கோரிக்கை மனுவினை தாக்கல் செய்வதற்கு எவ்வித உரிமையும் இல்லை. மேலும், இந்த மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்காணும் கோரிக்கை மனுவில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில், பின்னிட்டு சாட்சிகள் விசாரணை செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுக்கள் செல்லத்தக்கதல்ல. மேலும், இந்த மனுக்களில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மின்சார வாரிய அலுவலர் எதற்காக விசாரிக்கப்பட வேண்டும் என்று காரணம் எதுவும் சொல்லப்படவில்லை. மேலும், இந்த மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட E.A.No.6/2024-ல் மனுதாரர் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு வாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுக்களானது செல்லத்தக்கதல்ல. இந்த மனுக்களில், E-Court-ல் வாய்தா வந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் நீதிமன்றத்தில் 09.09.2025-ம் தேதியன்று மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுக்கள் திருப்பப்பட்ட சங்கதியை மறைத்து சொல்லப்பட்டுள்ள சங்கதியாகும். எனவே, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுக்களை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது.

3. இந்த மனுக்களில், இருதரப்பிலும் எவ்விதமான சாட்சிய, சான்றாவணமும் முன்னிடப்படுத்தப்படவில்லை. இந்த மனுக்களில் இருதரப்பின் வாதங்கள் கேட்கப்பட்டது மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.10.13 17:16:38 +0530

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்? "இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ?" என்பதேயாகும்.

**5. தீர்வு:–**

5.1. இந்த மனுக்களில் இடம்பெற்றுள்ள சங்கதிகளை வலியுறுத்தி மனுதாரர் தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் வாதிடப்பட்டது. அதேவேளையில், இந்த மனுக்களின் மீது தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை வலியுறுத்தி எதிர்மனுதாரர்கள் தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் வாதிடப்பட்டது.

5.2. இந்த மனுக்கள் குறித்த வழக்கு நடவடிக்கையின், ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது, இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறைவேற்று மனுவான E.P.No.6/2015–ல், 05.12.2024–ம் தேதியன்று இந்த மனுதாரரால் E.A.No.6/2024 என்ற கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், அந்த கோரிக்கை மனுவில், சாட்சிய மற்றும் சான்றாவணங்களின் பட்டியல் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், இந்த மனுதாரரை சாட்சியாக விசாரித்து சான்றாவணங்கள் குறியீடு செய்வதற்காக 04.07.2025–ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்ட மனுவானது E.A.No.7/2025–ஆக 04.08.2025–ம் தேதியன்று அனுமதிக்கப்பட்ட நிலையில், 06.08.2025–ம் தேதியன்று இந்த மனுதாரர் ம.சா.1–ஆக விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட நிலையில் 19.08.2025–ம் தேதியன்று எதிர்தரப்பினரால் இந்த மனுதாரர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

5.3. அதனை தொடர்ந்து ஏற்பட்ட 03.09.2025–ம் தேதிய வாய்தாவில் மனுக்கள் எதுவும் இல்லாத நிலையில் படி குறிப்பாணை மட்டும் சாட்சிகளுக்கான படி



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.10.13 17:16:44 +0530

குறிப்பாணை மட்டும் தாக்கல் செய்யப்பட்டதால், படி குறிப்பாணையானது திருப்பப்பட்டு வாதத்திற்காக வாய்தா ஏற்பட்ட நிலையில் 09.09.2025–ம் தேதியன்று இந்த மனுக்கள் குறைபாடுகளுடன் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்திலிருந்து திருப்பப்பட்டது. இந்நிலையில், 12.09.2025–ம் தேதியன்று மீண்டும் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மேற்காணும் வழக்கின் விசாரணை குறித்த விவரங்களிலிருந்து, நிறைவேற்று மனுவினை முடிவுக்கு கொண்டு வருவதை தடை செய்யும் வகையில் கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் கோரிக்கை மனுவினை நடத்தி முடிக்காமல் காலதாமதப்படுத்தும் எண்ணத்தில் சாட்சிகள் விசாரிக்க வேண்டும் என மனுக்களை தொடர்ந்து இந்த மனுதாரர் தாக்கல் செய்து வருகிறார் என்பதை தெளிவாக அறிய முடிகிறது.

5.4. மேலும், இந்த மனுக்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரிக்கைகளில், எந்தவொரு இடத்திலும் எதற்காக இந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்று எந்தவொரு காரணமும் குறிப்பிடப்படவில்லை. மேலும், இந்த மனுக்களில் அந்த அரசு அலுவகலர்கள் மூலம் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான விவரங்களும் இந்த மனுக்களில் இடம் பெறவில்லை. அதைத் தவிர, இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவில் தொடர்புடைய E.P.No.6/2015–ல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது, இந்த மனுதாரருக்கு கோரிக்கை மனுவில் இடம்பெற்றுள்ள சொத்தினை பரிமாற்றம் செய்த மனுதாரரின் தந்தையால் ஏற்கனவே கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தை காண முடிகிறது. மேலும், இதன் வழக்கு மற்றும் நிறைவேற்று மனு நிலுவையில் உள்ள விவரம் மனுதாரரின் தந்தைக்கு நன்கு தெரிந்திருந்த நிலையில் சொத்தினை மனுதாரருக்கு பரிமாற்றம் செய்துள்ளார்



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.10.13 17:16:50 +0530

என்பதை வழக்கு ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது.

5.5. மேலும், ஒரு வழக்கில் சாட்சிகளை விசாரிப்பதற்கான அழைப்பாணை அனுபவதற்காக தாக்கல் செய்யப்படுகின்ற உரிமையியல் நடைமுறைச் சட்டதின் கட்டளை XVI, விதி 1–ன் கீழான மனுக்களில் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் குறித்த விவரங்களுடன் எதற்காக அந்த சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டும் என்பது குறித்த காரணங்கள் எடுத்துரைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தினால், "Sai Jayakanth Bharathi vs R. Kasiraj in CRP (PD) No. 2313 of 2018 dated 26-09-2018 என்ற வழக்கில் சட்டக் கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. அந்த சட்டக் கருத்துரையானது பின்வருமாறு:–

*"7. The object of Order XVI, rule 1(2) C.P.C. is for the purpose of enabling the Court to decide as to whether the examination of witness is of any material benefit to decide the dispute between the parties. In the instant case, it is not in dispute that the documents which the petitioner intends to establish through summoning the public officials, have already been produced before this Court. I am unable to comprehend as to how in a suit for permanent injunction, these documents require to be substantiated and established by summoning these Revenue or Registration officials. The documents speak for themselves. The Honourable Division Bench of Kerala High Court in the aforesaid judgment while dealing with the scope of Order 16 Rule 1(2) C.P.C., had observed as follows:*

*"8.Under Order XVI Rule 1(2) of the Code of Civil Procedure a party desirous of obtaining any summon for the attendance of any person shall file in Court an application stating therein "the purpose for which the witness is proposed to be*



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.10.13 17:16:57 +0530

*summoned". The object of disclosing such purpose is to enable the Court to decide whether examination of such witness is of material benefit to decide the dispute. Court has to pass an order on the application and therefore a duty is cast on the Court to consider whether the purpose of citing the counsel of the opposite party as a witness is to speak to any material fact. If the Court is not so satisfied, the Court is not obliged to issue summons to him."*

5.6. எனவே, மேற்படி பரிசீலனை மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்காணும் தீர்ப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள சட்டக் கருத்துரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்பொழுது, இந்த மனுக்களானது எந்தவொரு அடிப்படையான மற்றும் தகுந்த காரணங்களின்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இந்த மனுக்களில் செலவுத் தொகை குறித்த உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 13.10.2025—ம் தேதி கையெழுத்து செய்யப்பட்டது.

PANDI MAHARAJA RAMAIAH Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH Date: 2025.10.13 17:17:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

<u>மனுதாரர்கள் & எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி & சான்றாவணங்கள்</u> — இல்லை

PANDI MAHARAJA RAMAIAH Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH Date: 2025.10.13 17:17:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
தாராபுரம்.